16 & 17 டி ம்பர 2023
திருவருகைக் கால மூன்றாம் வாரம்

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும்
தன்னார்வ தொண்டும்

மாதாந்திர நிகழ்வு:
திருவருகையும்
கிறிஸ்து பிறப்பும்



# LUMEN GENTIUM

## இரண்டாம் வத்திக்கான் சங்க திருஅவை கோட்பாட்டு விளக்கம்

**21 நவம்பர் 1964 திருத்தந்தை ஆறாம் பவுல் அவர்களால் அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது**

### எண்: 15 திருஅவைக்கும் கத்தோலிக்கரல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் உள்ள பிணைப்புகள்

திருமுழுக்குப் பெறுபவர்களுக்குக் கிறிஸ்தவர், இவர்கள் நம்பிக்கை முழுவதையும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அல்லது பேதுருவின் வழி வருபவருடன் ஒன்றித்து உறவு கொண்டிராவிட்டாலும் இவர்களோடு பல வழிகளில் தான் இணைக்கப்பட்டிருப்பதைத் திருஅவை அறிந்திருக்கிறது. ஏனெனில், இவர்களில் பலர் விவிலியத்தைத் தம் நம்பிக்கை, வாழ்க்கை ஆகியவற்றின் மேல்வரிச் சட்டமாக மதித்து உண்மையான சமய ஆர்வம் காட்டுகின்றனர்; எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளிடமும், இறைமகனுடனும் மீட்பருமான கிறிஸ்துவினிடமும் அன்பு கலந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்; திருமுழுக்கால் அழியாத முத்திரை பெற்றுக் கிறிஸ்துவோடு இணைந்திருக்கின்றனர்; இவர்கள் சபைகள் பலவற்றில் ஆயர்நிலை உண்டு. இவர்களில் பலர் நற்கருணைப் பலியை நிறைவேற்றுகின்றனர்; கடவுளின் அன்னையான கன்னிமரியாவிடம் பற்றுக்கொண்டு இப்பற்றைப் பேணி வளர்க்கின்றனர்; இன்னும் இறைவேண்டல்களிலும் ஆவிக்குறிய பிற நலன்களிலும் பங்கு கொண்டிருக்கின்றனர். தாய்த் திருஅவையும் இக்குறிக்கோளை அடைய இறைவேண்டல் செய்யவும் எதிர்நோக்கவும் செயலாற்றவும் ஒருபோதும் தவறவில்லை;

### எண்: 16 திருஅவையும் கிறிஸ்தவர் அல்லாதாரும்

நற்செய்தியை இன்னும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் கடவுளின் மக்களோடு பல்வேறு முறைகளில் தொடர்பு கொண்டவர்களே. இவர்களுள் முதல்வருபவர் உடன்படிக்கையையும் வாக்குறுதியையும் பெற்றுக்கொண்ட மக்களே. படைத்தவரை ஏற்றுக் கொள்ளும் மக்களையும் நிறைவாழ்வுத் திட்டம் உள்ளடக்கி நிற்கிறது. இவர்களில் ஆபிரகாமின் நம்பிக்கையைத் தாம் கொண்டிருப்பதாக அறிக்கையிட்டு, இரக்கமுடையவரும் இறுதிநாளில் மனிதருக்குத் தீர்ப்புக் கூறுபவருமான ஒரே கடவுளை நம்மோடு சேர்ந்து தொழும் இஸ்லாமியர் முதலிடம் பெறுகிறார்கள். தாங்கள் அறியாத கடவுளைச் சாயல்களிலும் உருவங்களிலும் தேடுபவர்களிடமிருந்தும் அவர் வெகு தொலைவில் இல்லை. ஏனெனில் அனைவருக்கும் உயிரையும் மூச்சையும் மற்றனைத்தையும் கொடுப்பவர் அவரே (திப 17:25-28), மீட்பராகிய அவர் எல்லா மனிதரும் மீட்புப் பெறவேண்டுமென விரும்புகிறார் (1 திமோ 2:4). தங்கள் குற்றம் எதுவுமின்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவரது திருஅவையையும் அறியாதவர்கள் நேர்மையான உள்ளத்துடன் கடவுளைத் தேடி, மனச்சான்றின் குரலில் கடவுளின் திருவுளத்தை அறிந்து ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால் நிலைவாழ்வைப் பெறுவர். திருஅவை நற்செய்தி அறிவிப்புப் பணியைப் போற்றி வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது.

### எண்: 17. திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பாணி

தந்தை மகனை அனுப்பியதுபோலவே மகனும் "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப் பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 28:18-20) என்று கூறித் திருத்தூதர்களை அனுப்பினார் (யோவா 20:21). கடவுளின் இத்திட்டம் பயன்தரும் முறையில் நிறைவேற ஒத்துழைக்குமாறு தூய ஆவி திருஅவையைத் தூண்டுகிறார். திருஅவையும் நற்செய்தியைப் போதித்து, அதைக் கேட்போர்களை நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கும் வெளிப்படையாக அதை அறிக்கையிடுவதற்கும் அழைக்கிறது; அன்பின் வழியாகக் கிறிஸ்துவில் நிறைவு பெறும் வரை வளருமாறு கிறிஸ்துவோடு அவர்களை இணைக்கிறது. மனிதரின் இதயத்திலும் மனத்திலும் மக்களின் வழிபாட்டு முறைகளிலும் பண்பாடுகளிலும் மறைந்து கிடக்கும் நல்லவை எவற்றையும் திருஅவை அழியவிடுவதில்லை; மாறாக, அவைகளின் குறைநீக்கி, உயர்வுறச்செய்து, நிறைவுபடுத்துகிறது. திருஅவையின் இச்செயல் கடவுளுக்கு மாட்சியையும் அலகைக்குக் குழப்பத்தையும் மனிதருக்கு மகிழ்ச்சியையும் விளைவிக்கிறது. இவ்வாறு இறைவாக்கினர் வழியாகக் கடவுள் கூறிய செயல்கள் நிறைவேறுகின்றன: "கதிரவன் தோன்றும் திசை தொடங்கி மறையும் திசைவரை வேற்றினத்தாரிடையே என் பெயர் புகழ்மிக்கது. எவ்விடத்திலும் என் பெயருக்குத் தூபமும், தூய காணிக்கையும் செலுத்தப்படுகின்றன" (மலா 1:11). இவ்வாறு உலகமனைத்தும் ஆண்டவரின் உடலும் தூய ஆவியின் கோவிலுமான இறைமக்களாக மாறும்படியும், அனைத்தையும் படைத்த தந்தைக்கு எல்லாருக்கும் தலைவரான கிறிஸ்துவில் மாட்சியும் பெருமையும் கிடைக்கும்படி திருஅவை மன்றாடுகிறது; அதற்காக உழைக்கிறது.

INTERNAL CIRCULATION ONLY
BUL51/2023

தயாரித்தவர்கள்: செய்தி ஆதாரம் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு Austin Flannery OP, 1975
திருத்தம்: மாமறைமாவட்ட மெய்ப்புப்பணி மையம் (API)
மின்னஞ்சல் directorapikl@gmail.com